பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

11 06 2025 **WEDNESDAY** **7.15 PM**

ஆகாஷவாணி
<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஜார்கண்ட், கர்நாடகா, ஆந்திரா ஆகிய மாநிலங்களுக்கு உட்பட்ட 7 மாவட்டங்களில் 6 ஆயிரத்து 405 கோடி ரூபாய் செலவில் ரயில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

2. பாகிஸ்தான் உடனான பிரச்சினை இருநாடுகள் சம்பந்தப்பட்டது அல்ல என்றும், இது தீவிரவாதத்துக்கு எதிரான உலகளாவிய பிரச்சினை என்றும் வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

3. வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் பணிகளை தேர்தல் ஆணையம் வெளிப்படைதன்மையுடன் மேற்கொண்டு வருவதாக தலைமை தேர்தல் ஆணையர் திரு கியானேஷ்குமார் தெரிவித்துள்ளார்.

4. தென்மேற்கு பருவமழை கேரளாவில் தீவிரமடைந்துள்ளது.

5. புரோ ஹாக்கி லீக் போட்டியில் இந்தியா – அர்ஜென்டினா இடையேயான முதலாவது ஆட்டம் நெதர்லாந்தின் **Amstelveen**-ல் தற்போது நடைபெற்று வருகிறது.

--இனி விரிவான செய்திகள்--

**<<<<<>>>>**

ஜார்கண்ட், கர்நாடகா, ஆந்திரா ஆகிய மாநிலங்களுக்கு உட்பட்ட 7 மாவட்டங்களில் 6 ஆயிரத்து 405 கோடி ரூபாய் செலவில் ரயில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இன்று புதுதில்லியில் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக்கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்த தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ், **Koderma – Barkakana** மற்றும் **Ballary – Chikjajur** இடையேயான வழித்தடத்தில் இரட்டை ரயில்பாதைகள் அமைக்கப்பட உள்ளதாக கூறினார்.

இதன்மூலம், கூடுதல் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்றும் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

**<<<<<>>>>**

பாகிஸ்தான் உடனான பிரச்சினை இருநாடுகள் சம்பந்தப்பட்டது அல்ல என்றும், இது தீவிரவாதத்துக்கு எதிரான உலகளாவிய பிரச்சினை என்றும் வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

**Brussels**-ல் ஊடக நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் அவர் இதனை தெரிவித்தார்.

தீவிரவாதம் இந்தியாவுக்கு மட்டுமின்றி உலக நாடுகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று அவர் கூறினார்.

கருத்து வேறுபாடுகளுக்கு போர் தீர்வாக அமையாது என்பதில் இந்தியா உறுதியுடன் உள்ளதாகவும் திரு ஜெய்சங்கர் தெரிவித்தார்.

**<<<<<>>>>**

திரிபுராவிலிருந்து பணி நிமித்தமாக காஷ்மீர் செல்லும் பாதுகாப்புப்படை வீரர்களுக்கு பழைய ரயில்களை ஒதுக்கீடு செய்த நான்கு அதிகாரிகளை இடைநீக்கம் செய்து ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் நடவடிக்கை எடுத்துள்ளார்.

அகர்தலாவிலிருந்து பாதுகாப்புப்படை வீரர்களுக்கென சிறப்பு ரயில் ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே அமைச்சர் சமூக வலைதள பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புப்படை வீரர்கள் கண்ணியமாக பயணம் மேற்கொள்வதை உறுதி செய்ய வேண்டிய பொறுப்பு அதிகாரிகளுக்கு உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதில் சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்றும் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

<<<<<>>>>

உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்பட்ட பாதுகாப்பு தளவாடங்கள் தற்போது ஏற்றுமதி செய்யப்பட்டு வருவதாக மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் கூறியுள்ளார்.

தமிழகத்தின் நாமக்கல்லில் இன்று செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

**(Sound Byte** - *எல். முருகன் (1) - 41* **Sec)**

டிஜிட்டல் பணப்பரிவர்த்தனையில் இந்தியா முன்னணியில் உள்ளதாகவும் திரு எல். முருகன் கூறினார்.

**(Sound Byte** - *எல். முருகன் (2) - 32* **Sec)**

<<<<<>>>>

வாக்காளர் பட்டியல் தயரிக்கும் பணிகளை தேர்தல் ஆணையம் வெளிப்படைதன்மையுடன் மேற்கொண்டு வருவதாக தலைமை தேர்தல் ஆணையர் திரு கியானேஷ்குமார் கூறியுள்ளார்.

அரசு முறைப்பயணமாக ஸ்வீடன் சென்றுள்ள அவர், தேர்தல் தொடர்பான **Stockholm** சர்வதேச மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றினார்.

ஆண்டுதோறும் வாக்காளர் பட்டியலில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கு வழங்கப்பட்டு வருவதாகவும் திரு கியானேஷ்குமார் தெரிவித்தார்.

<<<<<>>>>

அமர்நாத் யாத்திரைக்கான விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக ஜம்மு காஷ்மீர் துணைநிலை ஆளுநர் திரு மனோஜ் சின்ஹா கூறியுள்ளார்.

இன்று ஸ்ரீநகரில் நடப்பாண்டிற்கான யாத்திரையை தொடங்குவதற்கான சம்பிரதாய பூஜைகளில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

இந்த யாத்திரை அடுத்த மாதம் 3-ஆம் தேதி தொடங்கி, ஆகஸ்ட் மாதம் 9-ஆம் தேதி முடிவடையும் என்று அவர் தெரிவித்தார்.

இதில் பொதுமக்கள் பெருமளவில் பங்கேற்க வேண்டும் என்றும் திரு மனோஜ் சின்ஹா கேட்டுக்கொண்டார்.

<<<<<>>>>

தெலங்கானாவில் **B R S** தலைவர் சந்திரசேகர் ராவ் குடும்பத்தினர் யாரும் காங்கிரஸ் கட்சியில் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டர்கள் என்று தெலங்கானா முதலமைச்சர் திரு ரேவந்த் ரெட்டி கூறியுள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தெலங்கானாவின் வளர்ச்சிக்கு எதிராக இந்த குடும்பத்தினர் செயல்பட்டு வருவதாக குற்றம் சாட்டினார்.

<<<<<>>>>

சர்வதேச யோகா தினம் வரும் 21-ஆம் தேதி கொண்டாடப்பட உள்ளதையொட்டி, பணியிடங்களில் யோகா குறித்த பயிலரங்கு ஆகாஷ்வாணி சார்பில் நடைபெற்றது.

புதுதில்லியில் இரண்டு அமர்வுகளாக நடைபெற்ற இந்த பயிலரங்கில், தேசிய ஆயுர்வேத மையத்தின் யோகா துறை துணைபேராசிரியர் டாக்டர் புனித் சதுர்வேதி பங்கேற்று யோகாவின் பலன்கள் குறித்து எடுத்துரைத்ததோடு பயிற்சிகளையும் வழங்கினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய டாக்டர் சதுர்வேதி, யோக பயிற்சி தினசரி மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

ஆகாஷ்வாணியின் தலைமை இயக்குனர் டாக்டர் **Pragya Paliwal Gaur,** கூடுதல் தலைமை இயக்குனர் திரு **Madhu Nag** உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.

**<<<<>>>>**

நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்டுவரும் வேளாண் வளர்ச்சிக்கான பிரச்சார இயக்கம் விவசாயிகளிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

வேளாண் விளைப்பொருட்களின் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கிலும், நவீன தொழில்நுட்பங்களின் பயன்பாடு குறித்து விஞ்ஞானிகள் விவசாயிகளிடம் நேரடியாக எடுத்துரைப்பதற்கு ஏதுவாகவும் இந்த பிரச்சார இயக்கம் நடத்தப்பட்டு வருகிறது.

தமிழகத்தின் தூத்துக்குடி மாவட்டத்தில் 45-க்கும் மேற்பட்ட கிராமங்களில், இந்த இயக்கம் நடத்தப்பட்டு வருவதாக வேளாண் அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுநர் டாக்டர் மாசான செல்வம் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

***Sound Byte – மாசான செல்வம் - 46 Sec.)***

புதிய தொழில்நுட்பங்கள் குறித்து அறிந்துகொள்வதற்கு இந்த இயக்கம் உதவிகரமாக இருந்தது என்று இதில் பங்கேற்ற ஒருவர் தெரிவித்தார்.

***Sound Byte – பயனாளி – 21 Sec.)***

**<<<<>>>>**

தென்மேற்கு பருவமழை கேரளாவில் தீவிரமடைந்துள்ளது.

எர்ணாகுளம், இடுக்கி, திருச்சூர், காசர்கோட், ஆகிய மாவட்டங்களில் அதிகனமழைக்கு வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்மாநிலத்துக்கு உட்பட்ட பல்வேறு மாவட்டங்களில் கனமழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்காலுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த மூன்று நாட்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோவாவில் வரும் 12-ஆம் தேதி தொடங்கி, 16-ஆம் தேதிவரை அதிகனமழை பெய்யக்கூடும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

**<<<<>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

புரோ ஹாக்கி லீக் போட்டியில் இந்தியா – அர்ஜென்டினா இடையேயான முதலாவது ஆட்டம் நெதர்லாந்தின் **Amstelveen**-ல் தற்போது நடைபெற்று வருகிறது

--------------------

உலகக்கோப்பை துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்தியாவின் மனு பாக்கர் இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஜெர்மனியின் **Munich**–ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் 25 மீட்டர் பிரிவு தகுதிச்சுற்று ஆட்டத்தில் பெற்ற கூடுதல் புள்ளிகளின் அடிப்படையில் அவர் இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

----------------

ஜெர்மனியில் நடைபெறவுள்ள நான்கு நாடுகளுக்கு இடையேயான ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

**Araijeet Singh Hundal** தலைமையிலான இந்த அணியில் 24 பேர் இடம்பெற்றுள்ளனர்.

பெர்லினில் வரும் 21-ஆம் தேதி தொடங்கி, 25-ஆம் தேதிவரை நடைபெறவுள்ள இப்போட்டியில், ஸ்பெயின், ஆஸ்திரேலியா, ஜெர்மனி ஆகிய நாடுகள் பங்கேற்கின்றன.

**<<<<<END>>>>**